

தலைமைச் செயலகத்தில், அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில், இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வருகை தரும் திருவிழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகளின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன் காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி. வெங்கட்ராமன், உயர் அதிகாரிகள், பி.என்.ஸ்ரீதர். துரை, இரவிச்சந்திரன், டேவிட்சன் தேவாசிர் வாதம், அஸ்ரா கார்க், பிரவின்குமார் அபிதபு, பொ.பெரியசாமி, இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர்கள், முதுநிலை திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் உள்ளனர்.

### அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு:

# தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் பாராட்டு!

## மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் நா. சண்முகநாதன் அறிக்கை!

புதுக்கோட்டை, நவ.14

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் நா. சண்முகநாதன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:-

மத்திய அரசுக்கு இணையாக மூன்று சதவீத அகவிலைப்படி உயர்வினை ஜூலை 1ஆம் தேதி முதல் வழங்கப்படும் என்ற அறிவிப்பு தமிழ்நாட்டின் 16 லட்சம் அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் வாழ்வில் மிகுந்த மகிழ்ச்சி தரக்கூடிய அறிவிப்பாகும்.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த ஆசிரியர்களுக்காக தன் வாழ்நாளில் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய சொன்னதைச் செய்வோம், செய்வதை சொல்வோம் என்ற முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பாதையில் வந்த தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆசிரியர் அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவார் என்ற பெரும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழக அரசு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் என்று ஏற்கனவே கூறியதைப் போன்று தற்போது 55 சதவீதமாக இருந்த அகவிலைப்படியை 1.7.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி உத்தரவு வெளியிட்ட தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# 55 சதவிகிதத்திலிருந்து 58 சதவிகிதமாக அகவிலைப்படியை உயர்த்திய முதல்வருக்கு நன்றி!

## தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத் தலைவர் த.அமிர்தகுமார் அறிக்கை!

சென்னை, நவ.14-

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத்தலைவர் த.அமிர்தகுமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஆகியோர்களுக்கு அகவிலைப்படி உயர்வினை 55 சதவீதத்திலிருந்து 58 சதவீதமாக அதாவது, 3 சதவீதம் உயர்த்தியதோடு, இவ்வுயர்வினை ஜூலை மாதத்திலிருந்து உயர்த்தி வழங்க உத்தரவிட்டமைக்கு நூற்றாண்டு பாரம்பரியமிக்க பொது சங்கமான தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒன்றிய அரசு வழங்கும் அதே நாளிலிருந்து மாநில அரசும் அகவிலைப்படி உயர்வினை வழங்க வேண்டும் என 04-10-2025 அன்று முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பில் கோரிக்கை வைத்து இருந்தோம். இக்கோரிக்கையை நிறைவேற்றித் தந்ததோடு, 16 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பலன் அடையும் விதமாக நிலுவையின்றி ஜூலை முதல் தேதியிலிருந்து வழங்குவதாக அறிவித்துள்ளமைக்கு மிக்க மகிழ்ச்சி.

இவ்வறிவிப்புகளை செய்து எங்களை மகிழ்வித்ததுபோல, ஓய்வூதியம் தொடர்பாக அமைக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கையினை பெற்று, உடனடியாக பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தினை இரத்து செய்துவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தினை அமல்படுத்துதல், காலிப்பணியிடங்களை நிரப்புதல், 7வது ஊதியக்குழு 21 மாத நிலுவைத் தொகையை வழங்கிட வேண்டுமெனவும், மதிப்பூதியம், தொகுப்பூதியம் சிறப்பு காலமுறை ஊதியம் போன்றவர்களின் வாழ்வாதாரத்தைக் கணக்கில் கொண்டு அவர்களை பணிநிரந்தரம் செய்து, காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் போன்ற நிலுவை கோரிக்கைகளையும் முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என உறுதியாக நம்புகிறோம்.

இவ்வாறு த.அமிர்தகுமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.







சென்னை மண்டலத்திற்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் (OTN), மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) ஆகியோர் கலந்து கொண்ட கலந்துரையாடல் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமனியன், சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி., சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ., சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை தா.வேலு எம்.எல்.ஏ, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் உட்பட 33 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட தொகுதி பார்வையாளர்கள், தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் (OTN) மற்றும் மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) கலந்துகொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 267 வது நாள்!

## கொளத்தூர் மேற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

*சென்னை,நவ.14-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 267 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (13.11.2025), கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 69அ, பாலவாயல் ரோடு, அகரம் ( ராமர் கோயில் அருகில்), 2) வட்டம் 66, ஸ்ரீநகர் காலனி, ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி, தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*



*இந்நிகழ்ச்சியில் எ.நாகராசன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், D.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, P.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: P.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L. சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*


